# இல்லம் தேடிக் கல்வி

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக 1 முதல் 8 வகுப்புகள் வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை ஈடுசெய்வதற்காகத் தன்னார்வலர்களைக் கொண்டு தினசரி 1 முதல் 1½ மணிநேரம் (மாலை 5 மணி முதல் 7 மணிக்குள்) குறைதீர் கற்றல் செயல்பாடுகளை மேற்கொண்டு மாணவர்கள் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் "**இல்லம் தேடிக் கல்வி**" எனும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

எனவே, கொரோனா பெருந்தொற்றுப் பொதுமுடக்கக் காலங்களில், பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளைக் குறைத்திடும் வகையில் "**இல்லம் தேடிக் கல்வி"** எனும் இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது, மாநில அரசின் 100 சதவீத நிதிப்பங்களிப்பின் கீழ் ரூ.200 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படவுள்ளது.

**திட்டத்தின் தொலைநோக்கு**:

கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சார்ந்த பொதுமுடக்கக் காலங்களில், பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளைச் சரிசெய்தல்.

**திட்டக்குறிக்கோள்**:

**அ.** பள்ளி நேரங்களைத் தவிர, பள்ளி வளாகங்களுக்கு வெளியே மற்றும் மாணவர்கள் வசிப்பிடம் அருகே சிறிய குழுக்கள் மூலம் தன்னார்வலர்களின் பங்கேற்புடன் மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பை வழங்குதல்.

**ஆ.** மாணவர்கள், பள்ளிச் சூழலின் கீழ் ஏற்கனவே பெற்றுள்ள கற்றல் திறன்களை **"இல்லம் தேடிக் கல்வி"** திட்டச் செயல்பாடுகளின் வாயிலாக மீண்டும் வலுப்படுத்துதல்.

**இ.** இத்திட்டம் 6 மாத காலத்திற்கு தினசரி குறைந்தபட்சம் 1 முதல் 1½ மணிநேரம் (மாலை 5 மணி முதல் 7 மணிக்குள்) மாணவர்களுக்கு எளிய முறையில் கற்றல் வாய்ப்பை வழங்கி, அன்றாட கற்றல் செயல்பாடுகளில் படிப்படியாக பங்கேற்கச் செய்தல்.

**திட்டச்செயல்பாட்டு வழிமுறைகள்:**

தமிழகத்தில் 92,297 குடியிருப்புகளில் உள்ள 34,05,856 மாணவர்கள் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு வரை கல்வி பயின்று வருகின்றனர். கொரோனா பெருந்தொற்று பொதுமுடக்கக் காலங்களில் பள்ளிகள் செயல்படாததால் மாணவர்களிடையே கடுமையான கற்றல் இழப்பை ஏற்படுத்தியது . கிராமப்புற குடியிருப்பு அடிப்படையிலான இல்லம் தேடிக் கல்வி திட்டமானது குழந்தைகளிடையே கற்றல் இழப்புகளை வெகுவாகக் குறைக்க உதவும்.

இது ஒரு தன்னார்வ அடிப்படையிலான திட்டம் என்பதால் இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த சமூகத்தில் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். முதலில் கிராம அளவில் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி சமுதாய ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் முக்கியத்துவதை தெரு நாடகங்கள், பொம்மலாட்டம், நடனம் மற்றும் பாடல்கள் போன்றவற்றின் மூலம் உள்ளூர் நாட்டுப்புற கலைஞர்களின் உதவியுடன் பல்வேறு

கல்விசார் தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் (IEC–Information Education Communication) மேற்கொண்டு கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

பள்ளி அளவில் திறன் மேம்பாட்டு செயல்பாடுகள், சுவர் ஓவியம் போன்றவை ஏற்பாடு செய்யப்பட உள்ளன. "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் சார்ந்த சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் கிராமங்களில் அனைவரும் காணும் வண்ணம் வைத்திடல் வேண்டும். இளைஞர்களின் கவனத்தை ஈர்க்க மாவட்ட அளவில் மிதிவண்டி பேரணிகள் நடத்தப்பட வேண்டும். நடமாடும் வாகனங்களில் கலைஞர்களைக் கொண்டு கலை, கலாச்சார நடனம் மற்றும் "இல்லம் தேடிக் கல்வி" உணர்வை பரப்பும் பாடல்கள் போன்றவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநில அளவில், IEC கல்வி சார் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் தகவல்களை பாமார, சமூக ஊடகங்களில் விளம்பர பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும். தொலைக்காட்சி, வானொலி மற்றும் பிற தகவல் தொடர்புக் கருவிகள் வாயிலாக மாநிலத் தலைமை மற்றும் பிரபலங்கள் மூலம் செய்திகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்.

கிராம அளவில், பொருத்தமான "இல்லம் தேடிக் கல்வி" கற்பித்தல் மையங்கள் பாதுகாப்பான, சுகாதாரமான மற்றும் குழந்தைகள் அணுகக்கூடிய வகையில் தேர்வு செய்யப்பட வேண்டும். போதுமான மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி உறுதி செய்யப்பட வேண்டும்.

மேலும் ஒன்றிய மற்றும் தமிழக அரசால் வழங்கப்பட்ட கோவிட் தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

மையம் செயல்பட தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் மதச்சார்பற்ற மற்றும் பாகுபாடற்றதாக இருத்தல் வேண்டும். இதனால் அந்த பகுதியில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இடமளிக்க முடியும். கிராமக் குடியிருப்புகளுக்குள் அரசு

கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள் போன்றவற்றில் உள்ள இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இந்த திட்டம் முழுவதும் தன்னார்வலர்களின் தொண்டு உணர்வுகளின் அடிப்படையில் (spirit of volunteerism) செயல்படுத்தப்படும். IEC நடவடிக்கைகள் தன்னார்வலர்களுக்கு இந்த முயற்சியில் பங்கேற்க ஒரு திறந்த அழைப்பை வழங்கும். தன்னார்வலரை பணியமர்த்தல் என்பது தன்னார்வலர் பதிவு, தன்னார்வலர் தேர்வு, தன்னார்வலர் பயிற்சி மற்றும் தன்னார்வலர் பின்னூட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தன்னார்வலரைப் பயன்படுத்துவதற்கான அனைத்து நிலைகளையும் எளிதாக்கும் பொருட்டு "இல்லம் தேடிக் கல்வி" இணையதளம் (http://illamthedikalvi.tnschools.gov.in/) மற்றும் இணையவழி வாயிலாக தன்னார்வலர்கள் விண்ணப்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பயன்படுத்தி பள்ளி–மாணவர்–தன்னார்வலர்–கிராமதொடர்பு தடையின்றி நடக்கும்.

ஒரு தன்னார்வலர் பணியில் இருந்து விடுபட விரும்பினால் அந்த இடைவெளியை பூர்த்தி செய்ய போதுமான தன்னார்வலர்கள் இருப்பில் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும். இந்த தன்னார்வலர்கள் குழந்தைகளுக்கு கற்பித்தல்–கற்றல் பொருட்களை பயன்படுத்துதல் சார்ந்து தீவிரமான மற்றும் விரிவான பயிற்சி மாதத்திற்கு ஒரு முறை ஒன்றிய அளவில் வழங்கப்படும். இதேபோல் வாரத்திற்கு ஒரு முறை தன்னார்வலர்கள், சார்ந்த பள்ளியுடன் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அதே பகுதியைச் சேர்ந்த பெண் தன்னார்வலர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற தன்னார்வலர்கள், 1 முதல் 5 வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளுக்கு கற்பிக்க தகுதியுடையவர்கள். இதேபோல், பட்டப்படிப்பு தகுதி கொண்ட தன்னார்வலர்கள் 6 முதல் 8 வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளுக்கு கற்பிக்க தகுதியுடையவர்கள்.

ஒரு பொதுவான விதிமுறையாக 20 குழந்தைகளுக்கு ஒரு தன்னார்வலர் நியமிக்கப்பட வேண்டும். கற்பிக்க அதிகமான குழந்தைகள் இருந்தால் கூடுதல் தன்னார்வலர்களை தெரிவு செய்து நியமிக்க வேண்டும். ஒரு பகுதியில் உள்ள குழந்தைகள் வெவ்வேறு வயதினராக இருந்தால் பின்வரும் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு தனித்தனியே தன்னார்வலர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(அ) வகுப்புகள் 1 முதல் 5 வரை

(ஆ) வகுப்புகள் 6 முதல் 8 வரை

ஒரு வருடத்திற்கும் மேலாக குழந்தைகள் வழக்கமான, முறையான கற்றலில் ஈடுபடாததால் குழந்தைகளிடையே உருவாகியுள்ள கற்றல் இடைவெளியை இணைக்கும் பாலமாக தூண்டுதல் நுட்பங்கள் உள்ளடக்கிய கற்பித்தல் உத்திகள் ஒவ்வொரு குழந்தைக்கும் உதவுகிறது. இத்திட்டத்தின் முதல் 10 நாட்கள் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் பாடத்திட்டத்தைச் சார்ந்து இராது.

குழு சார்ந்த பங்கேற்பு, அனுபவ கற்றல் செயல்பாடு அடிப்படையிலான கற்றல் போன்றவற்றிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக எண்கள், அடிப்படை செயல்பாடுகள், அளவீடு, வடிவியல், பின்னங்கள் போன்றவைகள் படிப்படியாக கணிதத்தில் அறிமுகப்படுத்தப்படும். மொழிப் பாடமாக இருப்பின் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், புரிதல் ஆகியவை வலியுறுத்தப்படும். சுற்றுச்சூழல் அறிவியல், அறிவியல் மற்றும் அன்றாட வாழ்க்கை சார்ந்த பாடங்கள் வழங்கப்படும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் "இல்லம் தேடிக் கல்வி" வகுப்புகளுக்குரிய பாடத்திட்டம் தயாரித்து வழங்கப்படும்.

சராசரியாக தன்னார்வலர்களின் மாணவர்களுடனான ஈடுபாடு வாரத்திற்கு குறைந்தது 6 மணிநேரம் இருக்க வேண்டும். அதாவது தினசரி 1 முதல் 1½ மணிநேரம் (மாலை 5 முதல் 7 மணிக்குள்) உள்ளூர் சூழலுக்கு ஏற்ப மாணவர்களை

கற்றல் செயல்பாடுகளில் பங்கேற்க செய்தல் வேண்டும். மாணவர்களின் கற்றல் இடைவெளியை குறைக்கும் விதமாக இத்திட்டம் செயல்படுவதை உறுதி செய்ய, பள்ளியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளையும் (Children With Special Needs) உள்ளடக்கியதாக இத்திட்டம் செயல்படுத்துதல் வேண்டும்.

இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்தும் போது தன்னார்வத் தொண்டு உணர்வைக் கொண்டு குழந்தையின் கற்றல் இழப்பை பூர்த்தி செய்யும் அதே வேளையில் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒரு பகுதியாக பெற்றோர்களின் கடமை மற்றும் பொறுப்பு போன்றவை சார்ந்த விழிப்புணர்வை குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமாகும்.

அனைத்து நிலைகளிலும் பணியாற்றுபவர்களுக்கு (Stakeholders) பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கி ஊக்குவிக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தன்னார்வலர்களுக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்பட உள்ளது. "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் நவம்பர் 1, 2021 முதல் (2 வாரங்களுக்கு) 12 மாவட்டங்களில் (கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நீலகிரி, தஞ்சாவூர், திருச்சி மற்றும் விழுப்புரம்) தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முன்னோட்டத் திட்டமாக செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் தாக்கம் மற்றும் விளைவுகளின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். மாநில அளவிலான இத்திட்டம் 2021-22 கல்வியாண்டுடன் இணைந்து மே 2022 வரை நடைபெறும்.

**திட்ட அமைப்பு முறை:**

**"இல்லம் தேடிக் கல்வி"** திட்டத்தை மாநிலம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்திடும் வகையில் 4 அடுக்கு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன மாநில அளவிலான குழு, மாவட்ட அளவிலான குழு, ஒன்றிய அளவிலான குழு மற்றும் பள்ளி அளவிலான பள்ளி மேலாண்மைக் குழு.

**மாவட்ட அளவிலான குழு:**

**அமைப்பு முறை:**

| | |
|---|---|
| தலைவர் | மாவட்ட ஆட்சியர் |
| உறுப்பினர் செயலர் | முதன்மைக் கல்வி அலுவலர் |
| உறுப்பினர்கள் | • திட்ட இயக்குநர், ஊரகவளர்ச்சிதுறை<br>• முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வியியல் மற்றும் பயிற்சி நிறுவனம்<br>• மாவட்டக் கல்வி அலுவலர்<br>• இரண்டு வட்டாரக் கல்வி அலுவலர்கள்<br>• நான்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (SMC, MDO, Quality and Training)<br>• கல்வி மற்றும் சமூக செயல்பாடுகளில் அனுபவம் மிக்க தனிநபர்கள் (இந்நபர்களைத் தேர்வு செய்ய மாநிலக் குழுவை கலந்தாலோசிக்க வேண்டும்) |

**மாவட்ட அளவிலான குழுவின் பொறுப்புகள்:**

தன்னார்வலர்களுக்கான சேர்க்கைப் பதிவு தொடர்பாக பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

மிகப்பெரிய அளவிலான கள விளம்பரம் மற்றும் கலைக்குழு வாயிலாக இல்லம் தேடிக் கல்வி திட்டத்தை மாவட்டம் முழுவதும் கொண்டு சேர்த்தல் வேண்டும்.

**http://illamthedikalvi.tnschools.gov.in/ என்ற இணையத்தளத்தின் வாயிலாக அனைத்து தன்னார்வலர்களும் பதிவு செய்தல் வேண்டும்.**

**அவ்வாறு முழுமையாக இல்லம் தேடிக் கல்வி திட்டம் மக்களிடத்தில் முழு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட பின்பு அதன் வாயிலாக ஈர்க்கப்பட்டு தீவிரமாக சேவை செய்ய விரும்பும் களப்பணியாளர்களை தன்னார்வலர்களாக சேவை செய்ய ஊக்கப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு பரிசீலனை செய்யும் பட்சத்தில் மாவட்ட அளவிலான குழுவின் பிரதிநிதிகளைக் கொண்டு கலந்தாலோசனை செய்து தன்னார்வலர்களைத் தேர்வு செய்யும் முறையை நெறிப்படுத்த வேண்டும்.**

- இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் அனைத்து செயல்பாடுகளுக்காக மாவட்ட அளவில் பிரத்யேகமாக 5 ஆசிரியர்கள் (Exclusively for this purpose with rich experience in community mobilization) மாவட்டக் குழுவினால் அடையாளம் காணப்பட்டு முதன்மைக் கல்வி அலுவலரால் இப்பணிக்காக முழு நேரம் நியமிக்கப்படுதல் வேண்டும்.
- இவ்வாசிரியர்கள் மாவட்ட அளவில் நடைபெறும் கலைக்குழு நிகழ்ச்சிகளுக்கு திட்டமிட்டு, வழித்தட (Route Chart) மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்.
- மாவட்ட, ஒன்றிய மற்றும் பள்ளி அளவில் தகவல் கல்விசார் மற்றும் தகவல் தொடர்பு செயல்பாடுகள், பயிற்சி, தன்னார்வலர் பதிவு (சேவை மையங்கள் சம்பந்தப்பட்டவை) உள்ளிட்ட இல்லம் தேடிக் கல்வியின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் வேண்டும்.
- ஒன்றிய அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்தல் வேண்டும்.

- மாவட்ட அளவிலான குழுவில் அங்கம் வகிக்கும், கல்வி சார் மற்றும் சமூக ஒருங்கிணைப்பில் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
- இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கு தேவையான வளங்கள் மற்றும் நிதியினை ஒன்றிய மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.
- மாவட்ட அளவிலான குழுக்கள் குறைந்தது மாதம் இருமுறையாவது கூட வேண்டும்.
- இல்லம் தேடிக் கல்வியை சிறப்பாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட அளவிலான குழுவினர் அவ்வப்போது மையங்களை திடீர் பார்வையிடுதல் வேண்டும்.
- இல்லம் தேடிக் கல்வியின் முன்னேற்றத்தை மீளாய்வு மற்றும் கண்காணித்தல் பணிகளை மேற்கொண்டு அவற்றை ஆவணப்படுத்துதல் வேண்டும்.
- மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள கொரோனா தொற்று பரவலைத் தடுப்பதற்கான சமீபத்திய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- தன்னாவலர்களுக்கு முதற்கட்டமாக ஒன்றிய அளவிலும், அடுத்த கட்டமாக குறு வளமைய அளவிலும் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்
- இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்துவதற்கு குழந்தை உளவியலாளர்களின் ஆலோசனைகளையும் அவ்வப்போது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**ஒன்றிய அளவிலான குழு:**

**அமைப்பு முறை:**

| | |
|---|---|
| தலைவர் | வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) |
| உறுப்பினர் செயலர் | பணியில் மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் (BEO) |
| உறுப்பினர்கள் | • குறு வள மைய தலைமையாசிரியர் – பொறுப்பு<br>• வட்டார வளமைய மேற்பார்வையாளர்<br>• இரண்டு ஆசிரியர்கள் (இல்லம் தேடிக் கல்வி தொடர்பான வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு செயல்பாடுகளை தனிப்பட்ட முறையில் கவனிப்பார்கள். இந்த திட்டம் நிறைவடையும் வரை இது ஒரு முழுநேரப் பணியாக இருக்கும்)<br>• கல்வி மற்றும் சமூக செயல்பாடுகளில் அனுபவம் மிக்க தனிநபர் (பரிந்துரைக்கப்பட்ட பட்டியலை மாவட்ட அளவிலான குழு பகிர்ந்து கொள்ள வேண்டும்)<br>• பஞ்சாயத்து நிலைக் கூட்டமைப்பு (PLF) –3 உறுப்பினர்கள் |

**ஒன்றிய அளவிலான குழுவின் பொறுப்புகள்:**

- ஒன்றிய அளவில் பிரத்யேகமாக இரண்டு ஆசிரியர்கள் (Exclusively for this purpose with rich experience in community mobilization) மாவட்டக் குழுவினால் அடையாளம் காணப்பட்டு முதன்மைக் கல்வி அலுவலரால் இப்பணிக்காக முழு நேரம் நியமிக்கப்படுதல் வேண்டும்.
- மாவட்ட அளவிலான குழுவுடன் ஒருங்கிணைந்து, இல்லம் தேடிக் கல்வியை செயல்படுத்த பள்ளி மேலாண்மை குழுக்களுக்கு உதவுதல்.
- வட்டார அளவில், வளமைய மேற்பார்வையாளர் மற்றும் அனைத்து வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி புத்தாக்கப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

- தற்போதுள்ள பள்ளி மேலாண்மை குழுக்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல் வேண்டும்.
- பள்ளி மேலாண்மை குழுக்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் "இல்லம் தேடிக் கல்வி, மையங்களுக்குப் பொருத்தமான இடங்களை தேர்வு செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.
- இல்லம் தேடிக் கல்வி மையங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை கண்காணித்தல் வேண்டும்.
- இல்லம் தேடிக் கல்வி சிறப்பாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக மாவட்ட அளவிலான குழுவினர் மையங்களை அவ்வப்போது திடீர் பார்வையிடுதல் வேண்டும்.
- மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள கொரோனா தொற்று பரவலைத் தடுப்பதற்கான சமீபத்திய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

**குறுவள மைய அளவிலான குழுவின் பொறுப்புகள்;**

- குறுவள மைய அளவில் தலைமையாசிரியர்–1, ஆசிரியப் பயிற்றுநர் –1 மற்றும் ஆசிரியர்–1 கொண்ட குழுவை இத்திட்டத்திற்காக பிரத்யேகமாக நியமிக்கப்படுதல் வேண்டும்.
- ஒன்றிய அளவிலான குழுவுடன் ஒருங்கிணைந்து, இல்லம் தேடிக் கல்வியை செயல்படுத்த பள்ளி மேலாண்மை குழுக்களுக்கு உதவுதல்.
- பள்ளி மேலாண்மை குழுக்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் "இல்லம் தேடிக் கல்வி" மையங்களுக்குப் பொருத்தமான இடங்களை உறுதி செய்வதில் குறுவள மைய அளவிலான தலைமையாசிரியர் உதவி செய்தல் வேண்டும். மேலும், மையங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை கண்காணித்தல்.

- குறுவள மைய அளவில் அனைத்து தன்னார்வலர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதல் இக்குழுவின் பொறுப்பாகும்.
- "இல்லம் தேடிக் கல்வி" மையம் தன்னார்வலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு இவற்றிற்கிடையே உருவாகும் சவால்களுக்கு தீர்வு காண்பது குறுவள மைய குழுவின் பொறுப்பாகும்.
- பள்ளி மேலாண்மை குழுக்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்.
- இல்லம் தேடிக் கல்வி  சிறப்பாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அளவிலான குழுவினர் மையங்களை அவ்வப்போது திடீர் பார்வையிடுதல் வேண்டும்.
- ஒரு இல்லம் தேடிக் கல்வி மையத்திற்கு தெரிவு செய்யப்படும் தன்னார்வலர் பிற இல்லம் தேடிக் கல்வி மையத்திற்கு நியமிக்கப்படாததை குறுவள மைய தலைமையாசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.
- மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள கொரோனா தொற்று  பரவலைத் தடுப்பதற்கான சமீபத்திய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்

**பள்ளி மேலாண்மைக் குழு:**

**பள்ளி மேலாண்மை குழுவின் பொறுப்புகள்:**

- பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட அலைபேசி செயலியை பயன்படுத்தி இல்லம் தேடிக் கல்விக்கான தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் (உள்ளூர் தொண்டர்கள், பெண் தன்னார்வலர்கள், தன்னார்வத் தொண்டுக்கான ஆர்வம் மற்றும் கல்வி போன்றவற்றில் விருப்பம் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளித்தல்).

- சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தகவல், கல்விசார், தகவல் தொடர்பு செயல்பாடுகளுக்கு உதவுதல்.
- கிராமங்களுக்கு அருகில் மையங்களுக்கான இடத்தை அடையாளம் காணுதல்.
- தண்ணீர், மின்சாரம் மற்றும் மையங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற தேவையான அனைத்து வசதிகளும் இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- குழந்தைகளுடன் தன்னார்வலர்களை இணைத்தல் மற்றும் தன்னார்வலர்கள் வருகை தராத நிலையில், மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- குழந்தைகள் மற்றும் தன்னார்வலர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- இல்லம் தேடிக் கல்விக்காக ஒரு விழாவை ஏற்பாடு செய்தல்.
- குழந்தைகளுடனான தன்னார்வப் பிணைப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் அதுபோலவே ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கும் குழந்தைகளுடனான தன்னார்வப் பிணைப்பை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- பள்ளி மற்றும் சமூக அளவிலான நடவடிக்கைகளின் போது தன்னார்வலர்களை ஈடுபடுத்துதல்.
- ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்டுள்ள கொரோனா தொற்று பரவலைத் தடுப்பதற்கான சமீபத்திய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்.

**மையம் சார்ந்த தலைமையாசிரியரின் பொறுப்புகள்:**

- மாணவர்களுக்கு இல்லம் தேடிக் கல்வி மையங்களின் சுத்தம், சுகாதாரம் மற்றும் அணுகலை உறுதி செய்தல்.
- வாரந்தோறும் இல்லம் தேடிக் கல்வி வகுப்புகளுக்குத் திட்டமிட தன்னார்வலர்களை ஈடுபடுத்துதல்.
- பள்ளிகளில் இருந்து தன்னார்வலர்கள் /மையங்களுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
- மையங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்தல்.

**<u>நிதி சார்ந்த வழிகாட்டுதல்கள்</u>**

- ஒவ்வொரு மாவட்டத்திலும், **இல்லம் தேடிக் கல்வி** என்ற பெயரில் (மாவட்ட அளவில்) ஒரு சேமிப்பு கணக்கு உடனடியாக தொடங்கப்பட வேண்டும். வங்கி கணக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகிய இருவர் கூட்டு கையொப்பமிட்டதாக (Joint Signatory) இருக்க வேண்டும். தொடங்கப்பட்ட வங்கி கணக்கு விவரங்களை spd.ssatn@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்
- "இல்லம் தேடிக் கல்வி" வரவு செலவு திட்டக்கூறுகளை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னர் செலவினங்கள் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ரொக்க பதிவேடு (Cash Book) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் உள்ள கண்காணிப்பாளர்களால் கட்டயாமாக பராமரிக்கப்படவேண்டும்.
- வரவு செலவு கணக்குகளை ஒவ்வொரு வாரம் புதன்கிழமை அன்று மதியம் 12.00 மணிக்குள் தவறாமல் முதன்மைக் கல்வி அலுவலர்களிடம்

ஒப்புதல் பெறப்பட்டு, மாநில திட்ட இயக்ககத்திற்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

- அனைத்து திட்டக்கூறுகளுக்கும் உட்பட்டு செலவினங்களை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- கல்விசார் தகவல் தொடர்பு பிராச்சாரங்களுக்கான செலவினங்களை மாநில திட்ட இயக்ககத்தால் வழங்கப்படும். அறிவுரையின்படியும் மற்றும் மாவட்ட அளவிலான குழு மூலமாக ஒப்புதல் பெறப்பட்டு இச்செலவினம் சார்ந்த செயல்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.
- மாநில திட்ட இயக்ககத்திலிருந்து ஆய்வு மேற்கொள்ளும் பொழுது கோப்புகளையும், ரொக்கப்பதிவேடு மற்றும் பற்றுச்சீட்டுகளை சமர்பிக்கப்படவேண்டும்.
- தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000-னை தவறாமல் பின்பற்ற வேண்டும்.
- அனைத்து செலவினங்களும் இயன்ற வரை காசோலை மற்றும் மின்னணு பரிமாற்றம் (ECS) மூலமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். இயலாதபட்சத்தில் ரொக்க பரிவர்த்தனை மேற்கொள்ளலாம்.
- செலவினம் முடிந்த பின்பு, பயன்பாட்டுச் சான்றிதழ் (UC) இவ்வியக்கத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

மேற்காண் வழிகாட்டுதல்களை பின்பற்றி இல்லம் தேடி கல்வி திட்டத்தினை மாவட்டங்களில் சிறந்த முறையில் செயல்படுத்த அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * * * * *